**BEC REFLECTION**
**NOVEMBER 2016**

**கருப்பொருள்: இரக்கமுள்ள புனிதர்கள்**

**இலக்கு:** நமக்குத் தீமை செய்தவர்களை மனிக்கக் கற்றுக் கொள்வது

**தொடக்கப் பாடல்:**

**தொடக்கச் செபம்:** செபம் சொல்ல அதிச உறுப்பினர் ஒருவரை அழைக்கலாம்

## வாழ்வை நோக்குதல்

மரியா கொரத்தி, 1902ம் ஆண்டில் சாகும் போது வயது 12. ஆனால் இந்த இத்தாலியப் பெண்ணின் கதை, 100 ஆண்டுகளுக்கு மேலாக உலகமெங்கும் வாழும் கத்தோலிக்கர்களின் உள்ளங்களைத் தொட்டது. மரியாவின் பெற்றோர், குத்தகை நிலத்தில் பயிர் செய்யும் விவசாயிகள். அவளுக்கு ஒன்பது வயது இருக்கும் அவளது தந்தை காலமானார். ஒரு தந்தையும் மகனும் வாழும் மற்றொரு இடத்திற்கு மரியாவின் தாயும் குடும்பமும் மாற்றலாகி சென்றனர். அந்த மகனின் பெயர் அலெசண்ரோ.

மரியா வீட்டில் இருந்து அவளது தங்கையைப் பார்த்துக் கொண்டாள். அவளது தாயும் சகோதரனும் மூத்தச் சகோதரரியும் வேலை செய்ய வயலுக்குச் சென்றனர். 20 வயதாக அலெசண்ரோவைக் கண்டு அச்சம் கொண்டாள் மரியா. அவளைத் தொட்டு முத்தமிட அவர் முயன்றான். மரியா அவனைத் தடுத்து விட்டாள். கற்போடு வாழ கடவுள் நம்மை அழைத்திருக்கிறார் என்பதை அவர் அறிந்திருந்தாள். தமது கற்பைக் காப்பாற்ற அவள் விரும்பினாள். அலெசண்ரோவிற்கு ஆத்திரம் வந்தது. அவளைக் கொன்று விடுவதாக மிரட்டினான். அலெசண்ரோவைத் தவிக்க, அவனோடு தனியாக இருப்பதைத் தவிர்த்து வந்தாள்.

ஒரு நாள் தமது தங்கையைக் கவனித்துக் கொண்டிருக்கும் போது, தனியாக இருப்பதைக் கண்டு அலெசண்ரோ அவளை பலாக்காரம் செய்தான். அவள் மறுத்தப் போது 14முறை கத்தியால் குத்தினான். அலெசண்ரோவை மன்னித்து விட்டதாக தமது தாயிடம் சொல்லிய மரியா அடுத்த நாள் உயிர் நீத்தாள். இறப்பதற்கு முன் நோயிற்பூசுதல் பெற்றாள்.

வழக்கு விசாரணையின் போது, அலெசண்ரோ குற்றவாளி எனத் தீர்ப்பளிள்ளப்பட்டு, 30 ஆண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. தொடக்கத்தில் ஆத்திரம் ஆவேசமும் கொண்டு அவன், பின்னர் தமது கொடூரப் பாவத்திற்காக வருந்தினான். மரியா தம்மைச் சந்தித்து லில்லி மலர் கொடுப்பதாக அவர் கனவு கண்டான். தமது போக்கை மாற்றிக்கொண்டு, அனைவரிடம் அன்பாகவும் கரிசனையாகவும் நடந்து கொள்ளத் தொடங்கினான். சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்றதும், முதல் வேலையாக மரியாவின் தாயைச் சந்தித்து மன்னிப்பு மன்றாடினான். பின்னர் பிரான்சிசியார் மடத்தில் சேர்ந்து, அங்கு தோட்ட வேலைகளையும் இதர வேலைகளையும் அவன் செய்து வந்தான்.

1950ம் ஆண்டு புனிதராக மரியாக திருநிலைப்படுத்தப்பட்டாள். ரோமாபுரியில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில், மரியாவின் தாயும் அலெசண்ரோவும் கலந்து கொண்டனர்.

**பகிர்வுக்கான கேள்விகள்**

1. புனித மரியா கொரத்தி வாழ்க்கையில் உங்கள் உள்ளத்தைத் தொட்டது என்ன?
2. மௌனமாக, உங்கள் வாழ்க்கையில் மன்னிப்பதற்கு சிரமப்படும் நபரை மனதில் நிறுத்தி, அவரை செபத்தில் ஒப்புக் கொடுங்கள்.

## இறைவார்த்தை

**மத்தேயு 6:9-15**

ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்:
விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.

**சிந்தனை**

- ஒரு நிமிடம் மௌனமாக இருந்து, கடவுள் உங்களிடம் பேச அனுமதியுங்கள்
- மேலே உள்ள வாசகத்தில் ஒரு வார்த்தை அல்லது சிறு பகுதியை எடுத்துக் கொண்டு அதனை மூன்று முறை சொல்லவும்
- அந்த வார்த்தை அல்லது பகுதி, ஏன் உங்களைத் தொட்டது என்பதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்?

**அன்பில் வாழ்வ்**

ஒழுக்கத்தூய்மைக்குப் பாதுகாவலியான புனித மரியா, உடலால் சித்ரவதைக்கு ஆளான போதும் தம்மை தாக்கியவனை மன்னித்ததே அவளது நற்குணம். அவளது மன்னிப்பு அவனை முழுமையாக உருமாற்றி, தூய்மைப்பாதையில் செல்ல அவனைத் தூண்டியது.

மன்னிப்பே கிறிஸ்துவத்துவத்தின் தனித்தன்மை. கிறிஸ்து மனிதனாக பிறந்து, பாடுபட்டு, மரித்தது தந்தையாகிய கடவுளின் மன்னிப்பை நம்மோடு பகிர்ந்து கொள்வதற்கே. கிறிஸ்துவ விசுவாசத்தின் முத்தாய்ப்பாக விளங்கும் மன்னிப்பு, கடவுளின் வெற்றிவாகை.

பலருக்கு மன்னிப்பது முடியாத காரியமாக இருக்கலாம். ஆனால் கிறிஸ்துவர்க்கு, நாம் அன்பு செய்யும் இயேசு கிறிஸ்துவின் உள்ளார்ந்த ஆழமான பண்பே, மன்னிப்பு. இது, கிறிஸ்துவின் வேண்டுகோள் மட்டுமல்ல (மத்.6:14), தந்தையின் இரக்கத்தையும் மன்னிப்பையும் பிரதிபலிக்கும் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கான வழி.

எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் மன்னிப்பது போல் எங்களைப் பாவங்களை மன்னித்தருளும்... எனக்குத் தீமை செய்தவர்களை மன்னிப்பதற்கு இம்மாதிரியான நடவடிக்கைகளை நாள் மேற்கொள்ளலாம்?

**இறுதிச் செபம்**

இறுதிச் செபம் சொல்ல மற்றொரு அதிச உறுப்பிரை அழைக்கலாம்.

**இறுதிப் பாடல்:**

**சிந்தனைக்கு விருந்து:**

சில சமயங்களில் மன்னிப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆயினும் மன சாந்தி பெறுவதற்கு நமது உள்ளங்கையில் வைக்கப்பட்டிருக்கும் ஆயுதமே மன்னிப்பு. சினம், வன்மம், பழிவாங்குதல் முதலியவற்றை விட்டொழிப்பது, அமைதியான உள்ளத்தைப் பெறுவதற்கான முன்நிபந்தனை. எனவே அப்போஸ்தலரின் அறைகூவலுக்குச் செவிமடுப்போம்: “சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள், பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும்” (எபே.4:26). இவற்றுக்கெல்லம் மேலாக, இயேசுவின் வார்த்தையைக் கேளுங்கள். வாழ்க்கைக்கு ஏற்புடையது இரக்கம் என்றும் நமது விசுவாசத்தின் நம்பிக்கை என்றும் கூறியுள்ளார். “இரக்கமுடையவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்” இந்த மலைப்பொழிவு வாசகத்தை குறிப்பாக இந்த புனித ஆண்டில் நாம் கைக்கொள்ள வேண்டும். இரக்கத்தின் கருவியாக நாம் செயல்பட, முதலில் கடவுளிடமிருந்து இரக்கத்தின் கொடையை பெற வேண்டும். மற்றவர்களிடம் பெருந்தன்மையாகவும் தாராளமாகவும் நடந்து கொள்வதால், கடவுள் தமது அருளையும் அன்பையும் நம்மீது தாராளமாக பொழிவார்.

- திருத்தந்தை பிரான்சிஸ், MV #9, 14